STC.No.339 /2025 PW1. சூர்யாமூர்த்தி
தேதி– 27.03.2026
எதிரி ஆஜர்.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் கைமாற்றுக்கடன் கொடுத்ததாக STC.5/2026, STC.281/2025 என்ற இரண்டு காசோலை வழக்குகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கைமாற்றுக்கடன் கொடுக்கும் அளவிற்கு சேவை அமைப்பு எதுவும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுத்துவிட்டு, அதனை மறைத்து உண்மைக்கு புறம்பாக கைமாற்றுக்கடன் கொடுத்தேன் என்று தகவல் கூறி பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது வேறொரு நபர் கந்து வட்டி புகார் கொடுத்து நான் முன் பிணை எடுத்தேன் என்றால் சரிதான்.

2) இவ்வழக்கு காசோலையை நான் வங்கியில் எத்தனை முறை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் மூன்று முறை தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கு காசோலையை 01.09.2025 ம் தேதி நான் மூன்றாவது முறையாக வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எதிரியின் தாவா காசோலை மற்றும் இதர காசோலைகள் காணாமல் போனதாக 04.08.2025 ம் தேதியன்று உத்தமபாளையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் தெரியாது. எதிரியின் காசோலையை காணாமல் போனதை நான் எடுத்துக்கொண்டு வசூலுக்கு தாக்கல் செய்தததால் தான் முதல் இரண்டு முறை வசூலுக்கு தாக்கல் செய்தபோது எதிரியின் முகவரி தெரியாமல் பின்பு, அவரது முகவரி தெரிந்துகொண்டு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) அதனால் எதிரி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் தொலைந்த காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்தததால் தான் எனது வழக்கு ஆவணங்களில் எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்று குறிப்பிடவில்லை என்றால்

**சரியல்ல. தாவா காசோலையை நானே பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.**

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.03.27 18:50:31 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam